செ.வெ.எண்: 38 நாள்: 17.09.2016

# புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17-9-2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த வளர்ச்சிப்பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை நகராட்சியில் காந்திநகர் அருகில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் உரக்கிடங்கு மேம்பாட்டு பணிகள் (குப்பைகளை இயந்திரம் மூலம் தரம் பிரித்து மேம்பாடு செய்தல்) பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



மேலும் புதுக்குளத்தை சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிதியின் கீழ் மேம்பாடு செய்வதற்கும், கீழ இரண்டாம் வீதி பிள்ளையார்குளம் தூர்வாரப்பட்ட பணியையும், மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகத்தில் உள்ள தூர்வாரப்பட்ட குளம் பணியையும், காந்திப்பூங்கா அருகிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான சத்தியமூர்த்தி தங்கும் விடுதி மற்றும் நகராட்சி அலுவலகத்தில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் போன்ற பல்வேறு பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது உரக்கிடங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொட்டகை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகளை விரைவாக முடிக்கவும், நகராட்சியிலுள்ள பிற குளங்களை தூர்வாரி சிறப்பாக பராமரிக்கவும், சத்தியமூர்த்தி தங்கும் விடுதியை சீரமைத்து தனியார் நிறுவனம் மூலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து நகராட்சிக்கு வருமானத்தை பெருக்கவும், நகராட்சி முழுவதும் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து பராமரிக்க உரிய கருத்துரு அனுப்பவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஆகியோர் நகராட்சி உரக்கிடங்கில் மரக்கன்றுகளை நட்டார்கள். மேலும் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கைவாசல் ஊராட்சி, திருவேங்கைவாசலில் உள்ள ஊரணியில் நடப்பட்டுள்ள மரப்போத்துக்களை பார்வையிட்டார்கள்.

இந்த ஆய்வில் நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு.பி.காளிமுத்து, மண்டல செயற்பொறியாளர் திரு.பாண்டுரெங்கன், புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் (பொ) திரு.சி.ராஜாராம், நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் என்ற அப்துல்ரஹ்மான், வட்டாட்சியர் திரு.செந்தமிழ்குமார், துணை வட்டாட்சியர் திரு.முருகப்பன், நகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:  செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**